www.tamilarangam.net

# எரிமலையின் விளிம்பில்




தோழர். காமினி-சல்வடோர்

.E PRLF வெளியீடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலையின் விளிம்பில்...

தோழர் காமினி சல்வடோர்
பேட்டி கண்டவர்கள்
தோழர் ரமேஷ், தோழர் மகேஷ்

வெளியீடு :
செய்திப் பிரச்சாரப் பிரிவு
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
மே 1985

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு : மே, 22. 1985

ERIMALAIYIN VILIMPIL
Com. GAMINI SALVADOR

Interviewed By
Com. RAMESH & Com. MAGESH

அட்டைப்படம் : **தோழர் சேய்**

Published by
*Information Propaganda Wing*
**EELAM PEOPLES REVOLUTIONARY LIBERATION FRONT**

*முன்னுரை*

# இரண்டாவது போர்முனையை சிறீலங்கா மண்ணில் திறக்க வேண்டும்

இலங்கைத் தீவில் சிங்கள தமிழ் தேசங்களிடையே முரண்பாடு வளர்ச்சியடைந்து ஈழ தேசிய விடுதலைப் போராட்டம் இன்று கூர்மையடைந்துள்ளது. இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையின் பல்வேறு அம்சங்களையும் விளக்கி பல கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்துள்ள போதிலும் இவை பெரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருப்பதுடன் இவற்றினை இலங்கைக்கு வெளியே பெறுவதும் கடினமாய் இருக்கின்றது. ஈழத் தேசியவாதிகளின் வெளியீடுகளில் தமிழ் பேசும் மக்கள் முகம் கொடுக்கும் ஒடுக்குமுறைகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்ற அதே வேளையில் சிங்களப் பெரும் தேசிய வாதம் சரியான முறையில் ஆராயப்படாமல் இருப்பது பெரிய குறைபாடாகவே இருக்கின்றது. இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையை சரியான முறையில் விளங்கிக் கொள்வதற்கும் அதற்கான சரியான தீர்வை முன்வைப்பதற்கும் தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்கும் ஒடுக்குமுறைகளைப் பற்றி தெரிந்து கொள்வதுடன் சிங்கள பெரும் தேசியவாதம் பற்றியும் அறிந்திருப்பது மிகவும் முக்கிமானதாகும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை பொதுவாக எவரும் மறுத்து உரைப்பது இல்லை. தேசிய ஒடுக்குமுறையானது மூடிமறைக்க முடியாத அளவுக்கு பகிரங்கமாகி விட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாலும் அது பச்சையாகவே இடம் பெறுவதாலும் சிறிலங்கா ஆட்சியினதும் சிங்கள இன வெறியரதும் தாசர்களே அதனை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு என்று வரும் பொழுது ஈழமக்களின் ஆதரவாளர் மத்தியில் கூட குழப்பம் நிலவுவதைக் காணலாம். சிங்களப் பெரும் தேசிய வாதத்தைப் பற்றி தெளிவின்மையும் இலங்கை தேசிய இனப் பிரச்சனையின் குறிப்பிட்ட தன்மை பற்றிய அறிவின்மையும் இக் குழப்பத்திற்கான காரணங்களாகும். இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை பற்றி முன் வைக்கப்படுகின்ற சில தீர்வுகளைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

இலங்கைத்தேசிய இனப் பிரச்சனை பற்றி பேசப்படும் பொழுது **பிரதேச சுயாட்சி** என்ற சொற்தொடர் அடிக்கடி உச்சரிக்கப் படுவதை அவதானிக்கலாம். தமிழர் வாழும் நிலப்பரப்புக்களுக்கு பிரதேச சுயாட்சியை வழங்கி தமிழர்கள் தமது விவகாரங்களைக் கவனிப்பதற்கு அனுமதி அளிப்பதன் மூலம் இப்பிரச்சனையை தீர்க்கலாம் என்று சிலர் கூறிக் கொள்கிறார்கள். இவர்கள் யதார்த்தத்திலிருந்து எவ்வளவு தூரம் விலகி நிற்கிறார்கள் என்பது இலங்கையின் சமீப கால, நிகழ் கால வரலாற்றை தெரிந்தவர்கள் உணர்ந்து கொள்வது கடினமாக இருக்காது. பிரதேச சுயாட்சியை ஒத்த கோரிக்கையை தமிழர்கள் முன்வைத்த போது அது கிடைக்காதது மாத்திரம் அல்ல தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரித்தது தான் நாம் கண்ட மிச்சம். இதன் காரணமாக தமிழர்கள் தமது **சுய நிர்ணய உரிமையை** பிரயோகித்து ஈழ தேசத்தை மீட்டெடுக்க உறுதி பூண்டுள்ளனர்' இந்த நேரத்தில் **தமிழ் பேசும் மக்கள் வாழும் நிலப்பரப்புக்கள் சிங்கள குடியேற்றங்களினால் பறிக்கப்பட்டு வருகின்ற உண்மையை நாம் மறந்து விட முடியாது.** தமிழ் தலைவர்கள் சிறிலங்கா ஆட்சியளார்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களில்



தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் என்ற கருத்து மறைமுகமாகவெனினும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இன்று சிறிலங்கா ஆட்சியாளர்களும் சிங்கள இனவெறிக் குழுக்களும் **தமிழர்களுக்கு பாரம்பரிய பிரதேசம் ஒன்றில்லை** என்று விடாப்பிடியாகக் கூறி வருகின்றனர். சிங்கள இனவெறி அரசியல்வாதிகள் தமிழர்களுக்கென பாரம்பரிய பிரதேசங்கள் இல்லையென்று கூறி சிங்களக் குடியேற்றங்களை 'ராக்கெட்' வேகத்தில் செய்துகொண்டிருக்கும் போது தமிழர்களுக்குப் பிரதேச சுயாட்சியை சந்திர மண்டலத்திலா அமைப்பது? இந்நிலையில் பிரதேச சுயாட்சி என்று பேசுவது அர்த்தமில்லாத விடயமாகும்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவுக்கு பதில் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா பதவிக்கு வந்தால் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று கூறும் சிலரும் இருக்கிறார்கள். இவர்களது கூற்றினை முறியடிப்பதற்கு எமக்கு அதிக நேரம்பிடிக்காது. தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அடிப்படை வேறுபாடு எதுவும் கிடையாது. திருமதி சிறிமாவோ பண்டார நாயக்க ஆட்சியில் இருந்த காலத்தில் தமிழர்கள் ஒடுக்குமுறையை எதிர் நோக்கியதுடன் அவர் காலப் பகுதியில் பிரச்சனை மேலும் மோசமடைந்தது என்பது நினைவு கூரத் தக்கது.

ஜே. ஆரின் ஆதரவாளர்கள் பரப்பும் சில கருத்துக்களும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியுள்ளன. ஜே ஆர் சிங்கள இன வெறியரின் கைதியாகவே இருக்கின்றார் என்று சிலர் கூறுகின்றனர். "ஜே. ஆர் ஒருவரால் மாத்திரமே தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும்" என்பது தொண்டைமான் போன்றோரின் கருத்து. ஜே. ஆரை நல்லவராக காட்ட இவர்கள் படாத பாடுபட்டு வருகின்றார்கள். ஜே.ஆரின் தமிழர் விரோத

www.tamilarangam.net



நடவடிக்கைகளும் பேச்சுக்களும் நாம் திரும்பக் கூறத் தேவையில்லாத அளவிற்கு நன்கு தெரிந்த விடயங்களாகும். **சிங்கள மக்களிடையே இனவெறியை ஊட்டியதில் ஜே. ஆருக்கு பாரிய பங்கு உண்டு.** இனவெறியரின் கைதியாக ஜே.ஆர் இருக்கின்றார் என்றால் அது அவரே உருவாக்கிய சிறையாகவே இருக்க முடியும். இந்த சந்தர்ப்பத்தில் நியாயமான ஒரு கேள்வி தமிழ்மக்களிடையே எழுகின்றது. இன வெறியரின் கைதியான ஜே. ஆர் தேசிய இன பிரச்சனையை எவ்வாறு தீர்க்க முடியும்? என்பதே கேள்வியாகும்.

தமிழ் சிங்கள உழைக்கும் மக்களிடையேயான ஒற்றுமை என்பது நாம் இங்கு பார்க்க வேண்டிய இன்னொரு முக்கியவிடயமாகும். **சிறிலங்காவின் இன்றைய முதலாளித்துவ அரசு தமிழ் மக்களுடைய எதிரி மாத்திர மல்ல, சிங்கள மக்களினது எதிரியுமாகும். சிங்கள மக்கள் ஜனநாயக உரிமைக்காகவும் சுரண்டலுக்கு எதிராகவும் நடத்தும் போராட்டங்களுக்கு நாம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி வருகிறோம்.** சிங்கள மக்கள் எதிர் நோக்கும் பொருளாதாரப் பிரச்சனைகளை மூடி மறைக்கவும் அவர்களை அரசுக்கெதிரான போராட்டத்திலிருந்து திசை திருப்பவும் இனவாதத்தை சிறிலங்கா ஆட்சியாளர்கள் ஒரு ஆயுதமாக பயன்படுத்தி வருகின்றனர். இன்று சிறிலங்கா அரசினை மிகவும பலவீனப்படுத்துவது ஈழ மக்களுடைய போராட்டமாகும். எனவே **சிங்கள மக்கள் ஈழப் போராட்டத்தினால் ஏற்பட்டுள்ள சாதகமான நிலையைப் பயன்படுத்தி இரண்டாவது போர் முனையை சிறிலங்கா அரசுக்கெதிராக தென்னிலங்கையில் தொடங்க வேண்டும்** என்று நாம் சிங்கள மக்களை கேட்டுக் கொள்ள விரும்புகின்றோம். இதன் மூலமே சிங்கள மக்கள் தமது விடுதலையை அடைய முடியும். ஒரு தேசத்தை ஒடுக்கும் மற்றொரு தேசம் சுதந்திரமாகவே இருக்க முடியாது என்பதனை சிங்கள பாட்டாளி மக்கள் உணர வேண்டும்.



இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை தொடர்பான தெளிவான விளக்கத்தை ஏற்படுத்த வேண்டிய நிலையை உணர்ந்த நாம் **தோழர் காமினி சல்வடோரை** பேட்டி கண்டோம். சிறிலங்காவின் இன்றைய அரசியல் பொருளாதார நிலை பற்றி குறிப்பாக தேசிய இனப் பிரச்சனையின் பல்வேறு அம்சங்கள் பற்றி தோழர் காமினி சல்வடோருடன் நாம் நடத்திய பேட்டியே இச் சிறு நூலாக வெளி வருகின்றது. பரந்து பட்ட சிங்கள மக்களிடையே நீண்ட காலமாக அரசியல் வேலை செய்து வருகின்ற **தோழர் காமினி சல்வடோர் ஈழ மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மையை சிங்கள மக்களிடையே துணிச்சலுடன் எடுத்துச் சென்று வருகின்றார்.** சிங்கள மக்களிடையே காணப்படும் பெரும் தேசிய வாதக் குழுக்கள், அரசியல் கட்சிகள் தேசிய இனப் பிரச்சனையை எவ்வாறு பார்க்கின்றன? என்பதை இப் பேட்டியில் தோழர் காமினி சல்வடோர் தெளிவு படுத்துகின்றார். இன்றைய இலங்கையின் பொருளாதார நிலைமை, சிங்களப் பெரும் தேசிய வாதத்தின் பின்னால் உள்ள சக்திகள், சிங்களக் குடியேற்றம், இலங்கைத் தீவில் ஏகாதிபத்திய ஊடுருவல் சம்பந்தமான கேள்விகளுக்கும் இங்கு பதிலளிக்கப்பட்டுள்ளன. இங்கு கூறப்பட்டுள்ள கருத்துக்களும் விளக்கங்களும் இலங்கையின் யதார்த்தத்தினை சரியாக படம் எடுத்துக் காட்டுவதுடன் அவை தர்க்க ரீதியாகவும் உள்ளன.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை பற்றிய குழப்பங்களை தீர்ப்பதில் ஓரளவேனும் துணை புரியும் என்ற நோக்கில் இச் சிறு நூலை வெளியிடுகின்றோம். இது போன்ற நூல்களை தொடர்ந்தும் வெளியிட உத்தேசித்திருக்கின்றோம்.

"உலகத் தொழிலாளர்களே!
ஒடுக்கப்பட்ட தேசமக்களே ஒன்று சேருங்கள்"

செய்தி, பிரச்சாரப் பிரிவு

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கேள்வி**

**தோழர் ரமேஷ்**

**தோழர் மகேஷ்**

**பதில்**

**தோழர் காமினி சல்வடோர்**

## ஆளும் கட்சிக்குள் உள்ள முரண்பாடுகள்

1. **கேள்வி :-** ஸ்ரீலங்காவில் உள்ள ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள முரண்பாடுகள் என்ன?

**பதில் :-** ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனேக்கும் பிரதமர் பிரேமதாசாவுக்கும் இடையே முரண்பாடு காணப்படுகிறது. நிதியமைச்சர் றொனி டி மெல் விவசாய அமைச்சர் காமினி ஜயசூரியா ஆகியோர் பிரேமதாசாவுடன் முரண்படுகின்றனர். தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, கல்வி அமைச்சர் ரனில் விக்கிரமசிங்கா, காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்கா ஆகியோர் ஒரு குழுவாக இயங்குகின்றனர். முன்னாள் கைதொழில் அமைச்சர் சிறில் மத்தியூவும் மூத்த பௌத்த பிக்குகளும் ஒரு குழுவாக உள்ளனர். பெரும்பாலான குழுக்கள் தனிதனி குண்டர் படைகளை வைத்திருக்கின்றன. **தமிழருக்கு விரோதமான நடவடிக்கைகளிலும், தொழிலாளர் வேலை நிறுத்தங்களை முறியடிப்பதிலும், மாணவர் போராட்டங்களை நசுக்குவதிலும் இக் குண்டர் படைகள் பயன்படுத்தப் படுகின்றன.**

இக்குழுக்கள் மோசமான ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன. ''வீடில்லாதவருக்கு வீடு கட்டிக் கொடுக்கின்றேன்'' என்று சொல்லி இலங்கையின் மிகப் பெரிய பணக்காரராக பிரேமதாசா மாறி விட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் ஜே. ஆர். தென் ஆசியாவில் உள்ள மிகப் பெரிய பணக்காரர்களில் மூவர் தனது மந்திரி சபையில் இருப்பதாக குறிப்பிட்டார். ''யார் இந்த மூவர்?'' என்று அவருடைய நண்பர் வினாவிய போது பிரேம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாசா, லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா ஆகியோர் தான் அந்த மூவர் என்று ஜே. ஆர். சிரித்து கொண்டு பதிலளித்தார்.

இந்தக் குழுக்களுடைய மோதல்கள் எந்தெந்த மட்டங்களில் நடைபெறுகின்றது என்பதை கூற அதற்குக் கதை ஒன்று சொல்ல விரும்புகின்றேன். சிறில மத்தியூவின் குண்டர் படையின் முக்கியமான தலைவர்களில் ஒருவனாக கோணவெல சுனில் என்ற ஒருவன் இருந்தான். இவன் நாடறிந்த ஒரு ஐ. ஆர். சி. (பல தடவை கிரிமினல் குற்றங்களுக்காக சிறை சென்றவன்) பாடசாலை மாணவி ஒருத்தியை கற்பழித்ததற்காக இவனுக்கு நீண்ட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை வழங்கப் பட்ட சில நாட்களுக்குள்ளேயே இவனுக்கு ஜனாதி பதியினால் மன்னிப்பு வழங்கப்பட்டு இவன் விடுதலை செய்யப்பட்டான். 1983 ஜூலைக் கலவரத்தின் போது சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளை கொலை செய்யும் கான்டிராக்ட்டை இவன் எடுத்தான். வெலிக்கடைச் சிறையில் இருந்த தனது சகாக்கள் மூலம் அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை கொலை செய்வித்தது இவன் தான்.

சிறில் மத்தியூவுக்கு கோணவெல சுனில் செய்த சேவைகளுக்காக அவனுக்கு மத்தியூ சலுகைகளை வழங்கி வந்தார். கொழும்பு துறைமுகத்தில் இருந்து சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு எண்ணெய் கொண்டு செல்லும் குழாய்களில் இருந்து ''யாரும் அறியாமல்'' இவன் எண்ணெயை எடுத்துக் கொண்டிருந்தான். இந்தத் திருட்டை இவன் தனது உறவினர் ஒருவர் மூலம் செய்து கொண்டிருந்தான். இந்த நேரத்தில் ரனில் விக்கிரமசிங்கா இவனைத் தனது பக்கம் வென்றெடுத்து விட்டார். இதனால்



ஆத்திரமடைந்த சிறில் மத்தியூ இவனுக்குப் பாடம் படிப்பிக்க விரும்பினார். தனது கையாள் ஒருவன் மூலம் எண்ணெய் திருட்டு பற்றி பொலிசுக்கு சிறில் மத்தியூ தகவல் கொடுத்தார். பொலிஸார் சுனில் உற வினனை கைது செய்தனர். இவன் மீது நடவடிக்கை எடுக்கும்படி அப்போது கைத்தொழில் அமைச்சராக இருந்த சிறில் மத்தியூ உத்தரவு இட்டார். இந்த சம்பவம் பற்றிய விசாரணைக்கு என்ன நடந்தது என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை.

## ஜே. ஆரின் பின் தலைவராகப் போவது யார்?

2. **கேள்வி :-** ஜே. ஆர். ஜெயவர்த்தனேயின் பின்பு தலைவராகும் வாய்ப்பு பிரதமர் பிரேமதாசாவுக்கு இருக்கின்றதா?

**பதில் :-** இவர்தான் ஜே. ஆருக்கு அடுத்த தலைவ ராக இருக்கின்றார். ஆனால் பிரேமதாசாவுக்கு இப்போது பெரும் சவால் லலித் அத்துலத் முதலியால் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஜே. ஆர். லலித் அத்துலத் முதலியை தனக்குப் பின் தலைவராகும் நிலைக்கு வளர்த்து வருகின்றார்.

3. **கேள்வி :-** லலித் அத்துலத்முதலியின் எதிர்கால வாய்ப்புக்கள் எப்படி?

**பதில் :-** இன்று இனப்பிரச்சனையே பிரதானமான தாக உள்ளது. ''பயங்கர வாதத்தை'' ஒழிப்பதே அவசியமானது என்று மக்களுக்கு காட்டப்படு கின்றது. லலித் அத்துலத்முதலியே ''பயங்கர வாதத்தை'' ஒழிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். பாதுகாப்புப் பொறுப்பு அனைத்தும் ஜே. ஆர். இடம் உள்ளது. ஜே. ஆர். தனக்கு உதவியாக லலிததை பாது காப்பு உதவி மந்திரியாக நியமித்துள்ளார். ஆயுதப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படைகளிற்குள்ளும் லலித் தனக்கு செல்வாக்கை ஏற்படுத்தி வருவதுடன், ஆயுதப் படையினரிடையே லலித் மீது நம்பிக்கையும் ஏற்பட்டு வருகின்றது. அத்துடன் "பயங்கர வாதத்தை" ஒழிக்கும் நாயகனாக லலித் காட்டப் படுவதால் சிங்கள மக்களிடமும் செல்வாக்கு ஏற்பட்டு வருகின்றது. ஜே. ஆர். வெளிநாடு சென்ற போது தற்காலிக பாதுகாப்பு அமைச்சர் பதவி பிரதமராக இருக்கும் பிரேமதாசாவிடம் கொடுக்கப்படாமல் லலித் அத்துலத்முதலியிடம் கொடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

4. **கேள்வி :-** சிறில் மத்தியூவின் தற்போதைய நிலை என்ன?

**பதில் :-** சிறில் மத்தியூ தற்போது அமைச்சரல்ல, ஆனால் ஸ்ரீலங்காவின் மிகப் பெரும் தொழிற்சங்கமும் ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான ஜாதிக சேவக சங்கமயவின் தலைவராக இன்னமும் இருக்கின்றார். அரசாங்கத்தின் கொள்கைகளைப் பகிரங்கமாக விமர்சித்த போது ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டது. சிறில் மத்தியூ உயர் நீதிமன்றம் மூலம் இதைத் தடுத்து நிறுத்தி உள்ளார். பிரபல பௌத்த மத உயர் பீட குருமார்களும், பிரபல வியாபாரிகள் சிலரும் இவருக்குப் பக்கபலமாக உள்ளனர். சிறில் மத்தியூ ஆளும் கட்சியின் குண்டர் படைப் பிரிவு ஒன்றின் தலைவராக இருக்கின்றார்.

இவர் தான். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள பௌத்த நினைவுச் சின்னங்களை புனருத்தாரணம் செய்வது என்ற பெயரில் சிங்கள மக்களை குடியேற்றுவதில் முன்நின்று செயல்படுகின்றார். தனது குண்டர் படையில் உள்ளவர்களை பௌத்த குருமார்



போல் வேடமணிவித்து இப்பகுதிகளுக்கு அனுப்பி பௌத்த கோவில்களை நிர்வகிக்க அனுப்புகிறார். இதற்கு நிதியும் திரட்டுகின்றார். சிறில் மத்தியூ கைத்தொழில் அமைச்சராக இருந்த போது பிரபல தமிழ் முதலாளி ஒருவரிடம் ஏலம் ஒன்றுக்கு லஞ்சமாக பெரும் தொகைப் பணத்தை ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் பண்டிதரத்னா மூலமாகப் பெற்றார். இப் பணம் சங்கத்திற்காகவே பெறப்பட்டது. இச் செய்தி ஜே. ஆரின் காதுக்கு எட்டி விட்டது. அவர் பண்டிதரத்னாவை அழைத்து கடுமையாகக் கண்டித்தார். உடன் கட்சித் தலைவர் பதவியை பண்டிதரத்னா ராஜினாமா செய்தார்.

இனவாதக் குழுக்களில் உள்ள அல்லே குணவன்ச போன்றவர்களுக்கு மத்தியூ மீது நம்பிக்கை இல்லை.

## கராத்தே வீரர் பிக்கு

5. **கேள்வி :-** யார் இந்த அல்லே குணவன்ச?

**பதில் :-** கிட்டத்தட்ட 35 வயதுடைய **இளம் பிக்கு** சிறந்த பேச்சாளர். ஜப்பானில் **மார்ஷல் ஆர்ட்** பயிற்சியில் கறுப்புப் பட்டி பெற்றவர். தற்போது இவர் தான் மகாவலி அமைச்சில் பௌத்த விவகாரங்களுக்கான ஆலோசகராக இருக்கின்றார். இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆளும் கட்சியாக இருந்த போது மோசமான இனவாதியாக அரசியல் அரங்கில் நுழைந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவும் இவருக்கு இருந்தது. மாத்ருபூமி என்ற பத்திரிகையை பாடசாலை மாணவருக்காக வெளியிட்டதன் மூலம் தனது மோசமான இனவாதப் பிரச்சாரத்தை ஆரம்பித்தார். உயர் பாடசாலை மாணவர்களை வைத்து இரகசியமான குழுக்களை அமைத்தார். இதில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாணவர்களைத் தெரிவு செய்து ஜப்பானில் உள்ள மார்ஷல் ஆர்ட்டுக்கு அனுப்பி பயிற்சியளிக்கப் பட்டது. இவர்கள் பயிற்சியை முடித்து வந்து நாட்டின் பல பாகங்களில் சராத்தே பாடசாலைகளை அமைத்தார்கள். இவற்றின் மூலம் சிங்கள வாலிபர் களை பரவலாக திரட்ட முடிந்தது.

அல்லே குணவன்ச சிங்கள மக்களிடம் பெருமளவில் நிதி திரட்டுகின்றார். பிரபல முதலாளிகளுடன் உறவு வைத்திருக்கின்றார். ஸ்ரீலங்கா ஆயுதப் படையினரிடையே கீழ் மட்டங்களில் இவருக்கு ஆதரவு இருக்கின்றது. மூத்த சிங்கள பௌத்த பிக்குகளிடையே இவருக்கு தனி மதிப்பும், இவரது நடவடிக்கைகளுக்கான உற்சாகமான ஊக்கமும் இருக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசயக் கட்சி என்ற வேறுபாடின்றி இக் கடசிகளில் உள்ள சிங்கள இனவாத சக்திகளிடமும் இவருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. 1983-ல் தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலை நடவடிக்கைளின் பின்னால் அல்லே குணவன்ச செயல் பட்டார். இனப்படுகொலைகள் தீவிரமடைந்து. ஜே. ஆரின் கட்டுப்பாட்டை மீறி சம்பவங்கள் நடைபெற்றபோது அமைச்சர் காமினி திசநாயக்கா மூலம் அல்லே குணவன்சேயை அழைத்து தமிழர்களுக்கு எதிரான வன்முறையை கட்டுப்படுத்துமாறு ஜே. ஆர் கேட்டுக கொண்டார். அப்போது அல்லே குணவன்ச ஜே. ஆரிடம் ஒரு நிபந்தனை விதித்தான். தமிழர் களுக்கு எதிரான வன்முறையை சிங்கள மக்களின் இயல்பான, நீதியான, கோபத்தின் வெளிப்பாடு என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். ஆயுதப் படை மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது என்பதே அந்த நிபந்தனையாகும, ஜே. ஆர் இதற்கு உடன்பட்டு செயல் பட்டார். சிங்கள



பௌத்த இராச்சியம் ஒன்றை நிறுவுவதே அல்லே குணவன்சேயின் இலட்சியமாகும், ஜப்பானில் உள்ள பௌத்த மத வெறி கொண்ட மார்ஷல் ஆர்ட் மூலம் இவனுக்கு நிதி வசதியும் பெரும் ஆதரவும் கிடைக்கின்றது. இவனால் அனுப்பிவைக்கப்பட்டு மார்ஷல் ஆர்ட்டில் பயிற்சி பெற்ற சிலர் தற்போது ஸ்ரீலங்கா ஆயுதப் படையினருக்கு போதகர்களாக உள்ளனர்.

சிறில் மத்தியூ, காமினி திசநாயக்கா போன்றவர்களை தனது மோசமான இனவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வருகின்ற போதிலும் இவர்கள் தனிப்பட்ட நலன்களுக்காகவே செயல்படுகிறார்களே தவிர உண்மையில் சிங்கள பௌத்த இராச்சியத்தை உருவாக்குவதில் இவர்களுக்கு அக்கறை கிடையாது என்று அல்லே குணவன்ச கருதுகிறார். காமினி ஈரியகொல்ல போன்றவர்கள் அல்லேகுணவன்சேயின் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதுடன், திறமையான முறையில் இக் கொள்கைகளை பிரசசாரப்படுத்தியும் வருகின்றார்கள்.

மாலைத் தீவின் தலைநகரமான மாலியில் எயர் லங்கா விமான சேவையில் பணி புரியும் பெண் ஒருவருடன் அல்லே குணவன்ச உடலுறவு கொண்டிருந்த சமயம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான். இந்த செய்தியை அறிந்த இவனது மாணவர்கள் பலர் இவனது சுயரூபம் தெரிந்து இரகசியக் குழுக்களை விட்டு வெளியேறி விட்டனர். அல்லே குணவன்ச விமானப் பணிப் பெண்ணுடன் உடலுறவு கொண்ட செய்தியை ஸ்ரீலங்கா அரசினதும், முதலாளிகளதும் கட்டுப்பாட்டில உள்ள பத்திரிகைகள் மூடிமறைத்தன. ''ஐலண்ட்'' என்ற ஆங்கிலப் பத்திரிகையும, ஸ்ரீலங்கா கமயூனிஸ்ட் கட்சியின் 'அத்த' பத்திரிகையும இச் செய்தியை இவரது பெயரைக் குறிப்பிடாமல் பிரசுரித்திருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6. **கேள்வி :-** காமினி ஈரியகொல்ல யார்?

**பதில் :-** டட்லி சேனநாயக்காவின் மந்திரி சபையில் கல்வி அமைச்சராக இருந்த ஐ.எம்.ஆர்.ஏ. ஈரிய கொல்லயின் மகன். இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் மகாவலி அமைச்சில் பொறியியலராக கடமை ஆற்றினார். புதிதாக வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை கொண்டு வந்த போது மகாவலி அமைச்சில் இருந்து வெளியேறி இத்திட்டத்தை பகிங்கரமாக கண்டித்தார். இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சக்திகள் மத்தியில் செல்வாக்கை தேடிக் கொண்டார். இக்கால கட்டத்தில் சட்டப் பட்ட தாரிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இலங்கைத் தீவில் சிங்களப் பேரின வாதப் பிர சாரத்தை தீவிரப்படுத்தி வரும் இவர், வட்ட மேஜை மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட பிற்சேர்க்கை-சியை (Annexure-C, ஓரளவு சுயாட்சி அம்சம் அடங்கியது) எதிர்த்தும் தீவிரப் பிரசாரத்தை மேற்கொண்டார்.

## இன்றைய பொருளாதார நிலைமை

7. **கேள்வி :-** இலங்கைத் தீவில் இன்றைய பொருளா தார நிலைமை எவ்வாறு உள்ளது?

**பதில் :-** பணவீக்கம் அதிகரித்து விட்டது; வேலை யில்லா திண்டாட்டம் பெருகி வருகின்றது. தேசிய இனப் பிரச்சனை தொடர்பான போராட்டத்தினால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் பெருமளவு செலாவணியை தேடித்தரும் உல்லாசப் பயணத்துறை மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது. சுதந்திர வர்த்தக வலயம் மீது அரசாங்கம் பெரும் நம்பிக்கை வைததது. ஆனால் குறிப்பிடத்தக்க பயன் எதுவும் இதிலிருந்து கிடைக்கவில்லை. எதிர்பார்த்ததுபோல் முக்கியமான பல்தேசிய கம்பனி எதுவும் இங்கு முதலீடு செய்ய முன்வரவில்லை. தைக்கப்பட்ட ஆடைகள் தொழில் மட்டுமே முக்கியமானதாக இருக் கின்றது. இது கூட மீள் ஏற்றுமதி ஆகவே காணப் படுகின்றது, மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள பெரும் தொகையான காணிகள் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான ஏக்கர் காணி கரும்புச் செய்கைக்காக பல்தேசியக் கம்பனிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மன்னார், வவுனியா, மொனறாகலை மாவட்டங் களில் பல்தேசியக் கம்பனிகளுக்கு முதலீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



முன்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த டக்லஸ் லியனகே இஸ்ரேலுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளார். இவர் இஸ்ரேல் கம்பனி ஒன்றுடன் சேர்ந்து வவுனியா, மன்னாரில் விவசாயத் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளார். சிங்கள மக்களை குடியேற்றுவதும் இத் திட்டத்தின் நோக்கம்.

**அரசுத் துறையிடம் இருந்த தொழிற்சாலைகளும் சேவைகளும் தனியார் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.** கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகள் கவனிக்கப்படுவதில்லை. இத்துறைகளிலும் தனியார் துறையின் ஆதிக்கம் ஏற்பட்டு வருகின்றது இவற் றால்ஏற்படும நெருக்கடி சாதாரண மக்களை அழுத் திக் கொண்டு இருக்கின்றது. அந்நியக் கடன்சுமையும் அதிகரித்துக் கொண்டு இருக்கின்றது. அந்நியச் செல வாணியை தேடித் தருவதில தொடர்ந்தும் தேயிலைத் தொழிலே முக்கியமான இடத்தை வகிக்கின்றது. **இன்றைய அரசாங்கமானது தேயிலைத் தொழில் மீது நம்பிக்கை வைத்துள்ளது.** இத் தொழிலை அபி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதும் ஆயுதங்கள் வழங்கப்படுவதும் நடைபெறுகின்றது. இதனால் சிங்கள, தமிழ் மக்களிடம் பீதியும் பதட்டமும் அதிகரித்து உள்ளது. சிங்களக் குடியேற்றங்களில் உள்ள குடும்பங்கள் இக் கிராமங்களை விட்டு வெளியேறியுள்ளன. பெரும்பாலான பெண்களும் குழந்தைகளும் ஏனைய சிங்களப் பிரதேசங்களில் உள்ள தமது உறவினரிடம் சென்றுள்ளனர். ஆண்கள் மட்டுமே இக்கிராமங்களில் வாழ்கின்றனர். இதே போல் தமிழ்க் கிராமங்களில் இருக்கும் பெரும்பாலான குடுபங்களும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுக்கு சென்றுள்ளனர்.

இராணுவமும் இங்கு வாழும் தமிழ்க்குடும்பங்களை விரட்டி வருகின்றது. ஆனாலும் அரசாங்கம் இரண்டு லட்சம் சிங்கள மக்களை 1986ம் ஆண்டு முடிவதற்குள் தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் குடியேற்றியே தீருவது என்று திட்டம் வகுத்துள்ளது. இத் திட்டப்படி தமிழ் பேசும் மக்களின் பிரதேசத்தில் குடியேறும் ஒருவருக்கு 5 ஏக்கர் காணி வீடு கட்டுவதற்கு 40,000 ரூபா ஒரு வருடத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள், இராணுவப் பாதுகாப்பு, இராணுவப் பயிற்சி என்பவற்றை செய்து கொடுக்க அரசாங்கம் முன் வந்துள்ளது. அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக நீண்ட காலமாகவே தமிழ் பேசும் மக்களிடம் எதிர்ப்பு ஏற்பட்டு வருகின்றது. தமது பாரம்பரிய பிரதேசங்களை இழந்து கொண்டு போகும் ஆபத்தை உணர்ந்ததால் இத்தகைய எதிர்ப்பு தமிழ் பேசும் மக்களிடம் ஏற்பட்டது.

இப்போது இக் குடியேற்றத் திட்டங்கள் துரிதப்பட்டுள்ளதுடன் சிங்கள மக்களை ஆயுத பாணிகளாக



குடியேற்றுவது என்ற புதிய முறையும் கையாளப்படுகின்றது. இது **சியோனிச இஸ்ரேலிய விஸ்தரிப்பு பாணியிலேயே** நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுமா ?

9. **கேள்வி :** இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றும் சாத்தியக் கூறு இருக்கின்றதா ?

**பதில் :-** அப்படி ஒரு சாத்தியப்பாடு இருந்தது. வடக்கு, கிழக்கில் நடக்கும் யுத்தத்தை வெல்ல முடியாது என்று இராணுவத்தில் உள்ள உயர் அதிகாரிகள் சொன்னார்கள். இதனால்தான் ஜே. ஆர். வட்டமேசை மகாநாட்டில் தமிழர்களுக்கு சில சலுகைகள் கொடுப்பதன் மூலம் நிலைமையை சமாளிக்க முயற்சி செய்தார். ஆனால் இராணுவத்தில் உள்ள அணிகள் மத்தியில் ஜே. ஆரின் இம் முயற்சிக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. இராணுவத்திற்குள் மேல் மட்டத்திற்கும், கீழ்மட்டத்திற்கும் இடையே உள்ள முரண்பாடுகள் இதன் மூலம் கூர்மை அடைந்து வந்தது. தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான இனவாத உணர்வின் அடிப்படையிலேயே இந்த இராணுவம் அணிதிரட்டப்பட்டுள்ளது. இத்தகைய இராணுவம் தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வுகாண விரும்பமாட்டாது. தமிழ்ப் பிரதேசங்களில் இந்த இராணுவம் அந்நியப் படைகளாகவே செயல்பட்டு வருகின்றது. இதே வேளையில் ஈழப்போராளிகளின் தாக்குதல்களால் இராணுவத்தில் உள்ளவர்கள் கொல்லப்படுகிறார்கள். இதனால் இந்தப் பிரச்சனைக்கு விரைவான முடிவுகாண இராணுவம் விரும்புகின்றது. இந்த விரைவான முடிவை தமிழ் மக்களை முற்றாக அழித்தொழிப்பதன் மூலமே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாத்தியமாக்கலாம் என்றுதான் இராணுவம் கருதுகிறது. ஆனால் 1983-ல் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற படுகொலைகள் மூலம் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட அபகீர்த்தியினால் இராணுவத்தின் அழித்தொழிப்பு நடவடிக்கைகளுக்கு பூரண சுதந்திரம் அளிக்கமுடியாத இக்கட்டான நிலையில் அரசாங்கம் உள்ளது. இதனால் ஜே. ஆரை தூக்கியெறிந்துவிட்டு தமது நோக்கங்களுக்கு இடம் அளிக்கும் ஒருவரை அதிகாரத்திற்கு கொண்டுவரக் கூடிய வாய்ப்பை இராணுவம் ஆராய்ந்தது. இராணுவத்தில் உள்ள ஒருவரை அதிகாரத்தில் அமர்த்துவதை இலங்கையின் மரபு அனுமதிக்காது. இதனால் இராணுவத்தில் உள்ளவர்கள் பல அரசியல்வாதிகளை அணுகி அவர்களை அதிகாரத்தில் அமர்த்த ஆலோசித்தனர். இவர்கள் அணுகிய அரசியல்வாதிகளில் **சிறிமாவோ பண்டாரநாயக்காவும்** ஒருவராவார். ஆனால் இவர் இந்திய அரசும், ஏனைய நாடுகளும் இதற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பதால் இதற்கு இணங்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இராணுவத்தில் உள்ள அதிருப்தி நிலையை சீர்படுத்தும நடவடிக்கையை மேற்கொண்டார்.

10. **கேள்வி :-** லலித் அத்துலத் முதலி மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

**பதில்:-** ஆயுதப் படைக்கு இஸ்ரேலிய **மொசாத்** மூலம் விசேட பயிற்சி அளிக்கப்பட்டது. ஆயுதப்படை அதிகாரிகள் தென்கொரியா, பாகிஸ்தான், அமெரிக்கா, சீனா, இந்தோனேஷியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் விசேஷ பயிற்சிக்கு அனுப்பப்பட்டார்கள்.



ஆயுதப் படையினருக்கு ஊதியம் பல மடங்கு அதிகரிக்கப்பட்டதுடன். வேறு பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. **'சந்தேகப்படும்'' எவரையும் கொலை செய்யும் அதிகாரம்** ஆயுதப்படையினருக்கு வழங்கப்பட்டது. இது தொடர்பாக எந்த விசாரணையும் நடைபெறாது என்னும் விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன; அரசாங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சு வார்த்தைகளை முறித்துக்கொண்டது. சிங்களக் குடியேற்றத் திட்டங்களில் அக்கறை காட்டப்பட்டது. சிங்கள மக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதன மூலம் சிங்கள மக்களை தமிழருக்கு எதிரான யுத்தத்தில் பங்காளிகளாக்க அரசாங்கமே முயன்றது.

## சவக்குழி தோண்டப்படுகிறதா ?

11. **கேள்வி:-** சிங்கள மக்களை ஆயுதபாணிகளாக்குவதன் மூலம் தனது சவக்குழியை அரசு தோண்டுகிறது என்று கூற முடியுமா?

**பதில் :-** உண்மையில் இன்றைய அரசு சிங்கள, தமிழ் மக்களுக்கு எதிரானதாகும். தனது நலன்களைப் பேணுவதற்காகவே சிங்கள இனவாதத்தை இந்த அரசு ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றது. சிங்கள மக்களிடமிருந்து எழுகின்ற எதிர்ப்பைக் கண்டு இந்த அரசு அச்சமடைகிறது. சகல சிங்கள மக்களையும் ஆயுத பாணிகளாக்குவதோ அன்றி பயிற்சி கொடுப்பதோ தனக்கு விரோதமானதாக மாறிவிடும என்று அரசு உணர்ந்துள்ளது. இதனால் ஆளும் கட்சிக்கு சார்பானவர்களுக்கும், தனது குண்டர்களுக்கும் குடியேற்ற வாசிகளுக்குமே பிரதானமாக ஆயுதங்களையும், ஆயுதப் பயிற்சியையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொடுத்து வருகிறது. ஆனால் காலப் போக்கில் இந்த சக்திகள் தமது ஆயுதங்களை அரசுக்கு எதிராக திருப்பக்கூடும்.

## அமெரிக்காவின் இராணுவத் தலையீடு ஏற்படுமா ?

**12. கேள்வி :-** அமெரிக்காவின் நேரடியான இராணுவத் தலையீடு இலங்கையில் நடைபெறுமா?

**பதில்:** அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகின் பல்வேறு பகுதிகளில் இப்போது நெருக்கடிகளுக்குள் சிக்கிக்கொண்டு இருக்கின்றது. மத்திய அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளது. இதனால் இலங்கையில் நேரடியான இராணுவத் தலையீட்டில் அமெரிக்கா ஈடுபடும் என்று எதிர்பார்க்க முடியாது. இலங்கையில் இன்று வெடித்துக் கிளம்பியுள்ள போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமே தவிர கம்யூனிசப் போராட்டம் அல்ல. ஒடுக்கும் இனத்திடம் இருந்து ஒடுக்கப்படும் தேசிய இனம் விடுதலை பெறுவதற்காக நடைபெறும் இந்தப் போராட்டத்தில் கம்யூனிசப் பூச்சாண்டி காட்டித் தலையிடுகின்ற தனது வழமையான முறைகளை ஏகாதிபத்தியம் கையாள்வது சிரமமானது. இன்று சர்வதேச ரீதியில் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் ஆதரவைப் பெற்று வருகின்றது. அமெரிக்க மக்களும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தைப் பற்றி அறிந்துள்ளதால் அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் அமெரிக்க மக்களிடமிருந்து தமிழர்களை ஒடுக்குவதற்கு ஆதரவைப் பெறுவதும் கஷ்டமாக உள்ளது. "தமிழ்ப் பிரிவினைவாதிகள் மார்க்சிஸ்ட்டுக்கள் இலங்கை முழுவதற்கும் மார்க்ஸிச அரசை



ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கமென்று" ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இலங்கை அரசாங்கமும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவது அமெரிக்க இராணுவத்தை அழைப்பதற்காகவே.

அதிலாபத்தை ஒரே நோக்கமாகக் கொண்ட அமெரிக்க மூலதனத்தைப் பொறுத்தவரை ஒன்றரைக் கோடி ஜனத்தொகையைக் கொண்ட இலங்கையை விட 75 கோடி ஜனத்தொகையைக் கொண்ட இந்திய சந்தையை விரும்புவது இயற்கையாகும். இலங்கையில் நேரடியான இராணுவத் தலையீட்டில் ஈடுபடுவதன்மூலம் இந்தியாவுடன் உள்ள உறவுகள் மோசமடைந்து இந்திய சந்தையை முற்றாக இழந்துவிடும் நிலையை யிட்டும் அமெரிக்கா அஞ்சுகிறது.

இந்துமா கடலில் இந்தியா தீர்மானகரமான பாத்திரம் வகிப்பதால் இலங்கையில் அமெரிக்காவின் நேரடியான இராணுவத் தலையீடு என்பது சிரமமான காரியமாகவே உள்ளது. அமெரிக்க ஏகாபத்தியம் தனது மத்திய கிழக்கின் எண்ணெய் வள நலன்களின் கிழக்கத்திய அரணாக பாகிஸ்தானை கருதி வந்தது. ஆனால் கிழ்க்கத்திய அரணாக இந்தியா தான் இருக்க முடியும் என்று இப்போது அமெரிக்காவிற்குப் புரிந்துள்ளது. எனவே தான் **இந்திய-சோவியத் வலிமை மிகு உறவைச் சீர்குலைத்து இந்தியாவை தனதுபக்கம் இழுக்கின்ற முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.** இதனால் இலங்கையில் நேரடியாகத் தலையிடுவதன் மூலம் இந்தியாவுடன் பகிரங்கமான மோதல் நிலையை உருவாக்க அமெரிக்கா விரும்ப மாட்டாது, **ஆனால் இதன் அர்த்தம் இந்தியாவின் ஸ்திரத் தன்மையை குலைப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் மறைமுகமாக ஈடுபடவில்லை என்பதல்ல.** எவ்வாறாயினும் இலங்கையிடம் இருந்து பெற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டிய எல்லா விதமான வசதிகளையும் அமெரிக்கா ஏற்கனவே பெற்று விட்டது. உதாரணமாக திருகோணமலையில் இருக்கும் எண்ணெய் சூதங்களை ஒரு கம்பனியின் மூலம் அமெரிக்கா இலங்கையிடம் இருந்து பெற்று விட்டது. அமெரிக்காவின் எல்லாவித கப்பல்களும் திருகோணமலை உட்பட இலங்கையின் எல்லா துறைமுகங்களிலும் சேவைகளைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டு உள்ளன. வொய்ஸ் ஆப் அமெரிக்கா சக்தி வாய்ந்த ஒலிபரப்பு நிலையங்களை இலங்கையில் மேற்கில் நாத்தாண்டியாவில் அமைத்து வருகின்றது. சமீபத்தில் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மிகவும் விசாலமான கட்டிடம் ஒன்று அமைத்துள்ளதுடன் அங்கு பணிபுரியும் அமெரிக்க அதிகாரிகளின் தொகையை பெருமளவிற்கு அதிகரித்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவினுடைய அரசியல் இராணுவ மூல உபாயத்திற்கு இந்த வசதிகள் தேவையானவை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமெரிக்கா திரும்பத் திரும்பக் கூறுவது, தானிந்தப் பிரச்சனையில் நேர்மையாக நடந்து கொள்வதாக உலகிற்கும் குறிப்பாக இந்தியாவிற்கும் காட்டுவதற்கான தந்திரோபாயமே. ஒரு பக்கம் ஸ்ரீலங்கா அரசுக்கு மறைமுகமாக உதவிசெய்து கொண்டு மறு பக்கம் இந்திய அரசின் அனுசரணையுடன் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணும்படி ஸ்ரீலங்கா அரசை அமெரிக்கா பகிரங்கமாக கேட்டுக் கொள்வது உலகத்தை ஏமாற்றும் முயற்சியாகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் தனது நம்பிக்கைக்குரிய கூட்டாளியான ஜே. ஆர். ஜெயவர்த்தனேயை கைவிடவும் அமெரிக்கா தயாராக இல்லை. இதனால் மறைமுகமாகவும் தனது இராணுவக் கூட்டாளிகள் மூலமும் சிறிலங்கா அரசைப் பாதுகாக்கும் உதவிகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்து வருகின்றது. உதாரணமாக சியோனிச இஸ்ரேல், நிறவெறி பிடித்த தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் மூலம் இராணுவப் பொருளாதார ரீதியாகவும் ஏனைய வழிகளிலும் உதவி செய்து வருகிறது. இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேலிய மொசாட்டுக்கு இடம் அளித்திருப்பதன் மூலம் சி. ஐ. ஏ. வும் மொசாட்டும் இணைந்து வேலை செய்வதை நாம் மிகத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.



## சியோனிச இஸ்ரேலின் நோக்கம் என்ன ?

13. **கேள்வி** :- ஸ்ரீலங்காவுடன் இராஜதந்திர உறவு இல்லாதபோதும் ஸ்ரீலங்காவிற்கு உதவுவதில் இஸ்ரேல் ஆர்வம் காட்டுவது ஏன் ?

**பதில்** :- அமெரிக்காவின் வேண்டுகோளுக்காகவும் இந்தப் பிராந்தியத்தில் சி. ஐ. ஏ. மொசாட் நாசகார நடவடிக்கையின் மையமாக கொழும்பை மாற்றுவதின் நோக்கத்திற்காகவும் இஸ்ரேல் இவ்வாறு இலங்கைக்கு உதவுவதற்கு ஆர்வம் காட்டி வருகிறது.

14. **கேள்வி** :- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்போதுள்ள செல்வாக்கு எவ்வாறு உள்ளது? அது பலன் வாய்ந்த அமைப்பாக உள்ளதா ?

**பதில்**:- சிறிலங்கா சுதந்திரக் கட்சி பலம் வாய்ந்த அமைப்பாக இன்றில்லை. பல முக்கியஸ்தர்கள் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டனர். உள் முரண்பாடுகள் இக்கட்சிக்குள் கூர்மையடைந்துள்ளதுடன் இதன் அமைப்பு சிதைந்து வருகின்றது. மக்கள் இக் கட்சிமீது நம்பிக்கை இழந்து வருவதை காணமுடிகிறது. ஜே. ஆர். ஜெயவர்த்தனேயின் செல்லப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிள்ளைபோல் அனுரா பண்டாரநாயக்கா நடந்து கொள்கிறார். முக்கியமான விஷயங்களில் ஜே. ஆரின் நிலைப்பாடுகளை அனுரா பண்டாரநாயக்கா பகிரங் கமாகவே ஆதரிக்கின்றார்.

15. **கேள்வி :-** தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்ன ?

**பதில் :-** இவர்கள் ஈழம் பிரிந்து செல்வதை எதிர்க் கிறார்கள. ஐ. தே. கா. போன்று இவர்களும் தமிழர் போராட்டத்தை இனவாதக் கண்ணோட்டத்துட னேயே பார்க்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களுக்கு சில சலுகைகள் வழங்க முன்வந்தா லும் தமது அரசியல் லாபம் கருதி இவர்கள் அவற் றினை எதிர்க்கிறார்கள். உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இப்பிரச்சனையில் எதுவித வேறுபாடான அணுகு முறையும் கிடையாது.

## தேசிய இனப் பிரச்சனையும் ஸ்ரீலங்கா கட்சி களும்

16. **கேள்வி :-** தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமாஜக் கட்சி என்பலவற்றின் நிலைப்பாடு என்ன ?

**பதில் :-** நாடு பிரிவதை இவர்கள் எதிர்க்கிறார்கள். இராணுவ ரீதியான முறையில் இப்பிரச்சனையை தீர்க்கமுடியாது எனறும் பிரதேச சுயாட்சி மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்றும் இவர் கள் கூறுகின்றார்கள்.

17. **கேள்வி :-** இக்கட்சிக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு எவ்வாறு உள்ளது? குறிப்பாக தமிழ்



மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு எவ்வாறு உள்ளது?

**பதில் :-** இவர்களுக்கு மக்கள் மத்தியில் குறிப்பிடத் தக்க செல்வாக்கு முன்பிருந்தது. சிறிலங்கா சுதந் திரக் கட்சியுடன் சேர்ந்து இவர்கள் கூட்டு அரசாங் கம் அமைத்ததன் மூலம் இவர்கள்மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை குறைந்து வெறுப்பு ஏற்பட்டுள் ளது. 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர் தலில் இக்கட்சிகள் சார்பில் போட்டியிட்ட அபேட் சகர்கள் அனைவரும் தோல்வி அடைந்தனர். முன்பு வெற்றிபெற்ற தொகுதிகளில் இவர்கள் தோல்வி யடைந்தனர். ஆனால் பின்னர் நடைபெற்ற இடைத் தேர்தல் ஒன்றில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றம் சென்றார்.

தமிழ் பேசும் மக்களிடமும் இவர்களுக்கு குறிப்பிடத் தகுந்த செல்வாக்கு முன்பு இருந்தது. தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பாக நிலைப்பாடு முன்பு இருந் ததால் இந்த செலவாக்கினை இவர்களால் பெற முடிந்தது. 1956-ல் பண்டார நாயக்கா அரசாங்கம் தனிச் சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்தபோது இவர்கள் அதனை எதிர்த்து நின்றார்கள். தமிழுக் கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்தை வலியுறுத்தி னார்கள். இதனால் சிங்கள இனவாத சக்திகளிடம் இருந்து இவர்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. பின்னர் பாராளுமன்ற அரசியல் லாபம் கருதி தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பான தமது நிலைப்பாடுகளினை இவர்கள் படிப்படியாக மாற்றிக் கொண்டபோது தமிழ் மக்களிடம் இருந்த செல்வாக்கை இவர்கள் இழந்தனர்.

18. **கேள்வி :-** இந்த இரண்டு கட்சிகளிலும் பலம் வாய்ந்த கட்சி எது ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பதில் :-** இந்த இரண்டு கட்சிகளிலும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியே பலம் வாய்ந்த கட்சியாக உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள சரத் முத்தேட்டு வேகமவினது தனிப்பட்ட செல்வாக்கும் இதற்கு ஒரு காரணமாகும். சோவியத் யூனியனின் ஆதரவு இக் கட்சிக்கு உள்ளதும் மற்றொரு காரணமாகும்.

## தேசிய இனப் பிரச்சனையும் ஸ்ரீலங்காவிலுள்ள முக்கியமான மூன்று நிலைப்பாடுகளும்

19. **கேள்வி :-** தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக சிங்கள மக்களிடையே உள்ள அரசாங்க விரோத முகாமினுள் நிலவும் முக்கியமான நிலைப்பாடுகள் யாவை ?

**பதில் :-** முக்கியமாக மூன்று நிலைப்பாடுகளை நாம் பார்க்கலாம். முதலாவது நிலைப்பாடு ஜே. ஆர். விரோத, தமிழர் விரோத நிலைப்பாடு, இன்றைய அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள், பொருளாதார பிரச்சனைகள் தொடர்பாக இவர்கள் அரசாங்கத்தை எதிர்க்கிறார்கள். உல்லாசப பயணிகளாலும் வேறு மேற்கத்திய செல்வாக்கினாலும் சிங்கள மக்களின் கலாச்சாரம் சீரழிந்து வருகிறது என்றும் இவர்கள் கூறுகின்றார்கள். இவற்றுடன் மோசமான தமிழர் விரோத உணர்வினை இவர்கள் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் விரோத உணர்வுகளுடன் இவர்கள் மேற்கத்திய எதிர்ப்பாளர்களாகவும் இருக்கின்றார்கள். சிங்களபெரும் தேசியவாதம் வெகுஜன அடித்தளம் கொண்டிருப்பதால் இவர்களின் இத்தகைய நிலைப்பாட்டிற்கு பொதுமக்களிடம் ஆதரவு காணப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சிறிலங்கா மகாஜனக் கட்சியில் பெரும்பாலானோர், தினேஸ் குணவர்த்தனா தலைமை தாங்கும் மக்கள் ஐக்கிய முன்னணி கட்சியினர் இக் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.



இரண்டாவது நிலைப்பாடு பொதுவான பிரச்சனைகளில் அரசாங்கத்திற்கு விரோதமாக இருப்பதுடன் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று கூறுகிறது. இதில் இரண்டு பிரிவினர்களைக் காணலாம்:

முதலாவது பிரிவினர் தமிழ் மக்களுக்கு விசேட பிரச்சனைகள் உண்டு. ஆனால் அதற்காக நாடு பிரிக்கப்படத் தேவையில்லை. பிரதேச சுயாட்சி மூலம் அரசியல் தீர்வு காணப்படமுடியும் என்று கூறுகின்றனர். கம்யூனிஸ்ட்டுக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி போன்றவை இக்கருத்துக்களை பிரதிபலிக்கின்றன.

இரண்டாவது பிரிவினர் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உள்ள பிரச்சனைகள் பொதுவானவை தான்; சோசலிசப் புரட்சி மூலமே இவற்றிற்குத் தீர்வு காணலாம்; சோசலிசப் புரட்சியை மழுங்கடிப்பதற்காகவே நாடு பிரிக்கும் போராட்டத்தை சி. ஐ. ஏ. தூண்டிவிட்டு இருக்கிறது; தமிழ் பிரிவினைவாதிகள் சி. ஐ. ஏ.யின் கைக்கூலிகள் என்று கூறுகின்றனர். இதனை ரோகண விஜயவீர தலைமை தாங்கும் ஜனதா விமுக்தி பெரமுனையும் (JVP) சில மாவோயிசக் குழுக்களும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

மூன்றாவது நிலைப்பாடு ஈழப் போராட்டத்தின் நியாயத் தன்மையை ஏற்றுக்கொள்கிறது. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வர்க்க ரீதியாக பொதுவாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒடுக்கப்படுவதுடன் தமிழ் மக்கள் தேசிய இனம் என்ற வகையிலும் பிரத்தியேகமாக ஒடுக்கப்படுகின் றார்கள். **இன்றைய அரசாங்கமும் தற்போதைய முதலாளித்துவ அமைப்பும் தமிழ், சிங்கள மக்களுடைய பொது எதிரிகளாகும்.** எனவே இன்றைய முதலாளித் துவ அமைப்பினை முற்றாக மாற்றி அமைக்க வேண்டும். இதற்காக **சிங்கள மக்கள் தமிழ்ப் போராளிகளுடன் சேர்ந்து இரண்டாவது போர் முனையைத் தென்னிலங்கையில் திறக்கவேண்டும்.** இந்த நிலைப்பாட்டிற்கு தற்போதைக்கு சிறிதளவு ஆதரவு கிடைத்தாலும் இந் நிலைப்பாட்டிற்கு ஆதரவு வளர்ந்து வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்